# தமிழர் திருமணம்



அறிஞர் பெருமக்களின்
கருத்துரைகள் இணைந்தது

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

# தமிழர் திருமணம்

அறிஞர் பெருமக்களின்
கருத்துரைகள் இணைந்தது

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M.A., L.T., M.O.L., Ph.D.

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
செல் : 9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

## நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | தமிழர் திருமணம் |
| நூலாசிரியர் | : | மா. இராசமாணிக்கனார் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | ஜூன் 2014 |
| தாள் | : | 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18.5 செ.மீ. x 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 48 |
| விலை | : | ₹20/- |
| நூல் வெளியீடு | : | முல்லை பதிப்பகம்<br>323/10, கதிரவன் காலனி<br>அண்ணாநகர் மேற்கு<br>சென்னை - 40<br>செல்: 9840358301<br>e-mail: mullaipathipagam@yahoo.com |
| அச்சிட்டோர் | : | பாரதி பிரிண்டர்ஸ்<br>சென்னை- 600005 |
| கணினி அச்சு | : | ஆனந்தி கணினியகம்<br>சென்னை-68<br>9884333630 |

# அறிவிப்பு

இக்காலத் தமிழர், பண்டைத் தமிழராய நம் முன்னோர் பெருமையை எய்த வேண்டுமாயின் - தம் மதிப்போடு வாழ வேண்டுமாயின் - அம் முன்னையோர் சென்ற நெறியில் இயன்ற அளவேனும் செல்லுதல் வேண்டும். அங்ஙனம் செல்லும் முயற்சிக்கு முதற்படியாக அவர்தம் இற்றைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் பெருமாற்றம் அடைதல் வேண்டும். என்னை, அவை பண்டைத் தமிழர் மரபுக்கு முற்றும் மாறான வடமொழியாளர்களால் தமிழரிடை நுழைக்கப்பட்டுத் தமிழர் நிலைமை இழிவை அடைந்திருத்தலின் என்க. அவ்வாழ்க்கை நிகழ்ச்சிகளில் தலையாயது 'தமிழர் திருமணம்' ஆகும். பண்டைத் தமிழர் திருமண நிகழ்ச்சிகட்கும் இக்காலத் தமிழர் திருமண நிகழ்ச்சிகட்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுகளைக் காணலாம். அக்காலத்தே இல்லாத புரோகித வேலை, வடமொழி மந்திரங்கள் (நிறைமொழி), தமிழ் மரபுக்கு மாறான பல செயல்கள் இன்ன பிறவும் இக்காலத் தமிழர் திருமணத்துள் இடம் பெற்றுத் தமிழ் மரபைக் கெடுத்துவிட்டன. தமிழ் மொழியைப் பேசும் மக்களது திருமணத்தில் தமிழில் நிகழ்ச்சிகள் நடைபெறாமல் - தமிழர்க்குச் சிறிதும் புரியாத வேறு மொழியாம் வடமொழியில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன எனின், இதனினும் தமிழர்க்கு மானக் கேடானது வேறு யாதுதான் உளது? எண்ணிப் பாருங்கள்! இவ்விழிநிலைமை நீக்கப்படலன்றோ நமது முதற்கடமை!

இத்தகைய குறைகளைக் களைந்தெறிந்து நமது பழந்தமிழ் மரபினைக் காக்கவே, 'தமிழர் நல்வாழ்க்கைக்

கழகம்' என்னும் பெயரால் யாங்கள், கழகம் ஒன்றைக் கண்டோம்; அதன் முதற் பணியாகத் தமிழர் திருமணத்தைச் சீர்பெற அமைக்க முற்பட்டோம்; 'தமிழர் திருமண நூல்' ஒன்றை ஆராய்ச்சி முறையில் எழுதி வெளியிட விழைந்தோம். எமது விருப்பத்துக்கு இணங்கித் தமிழர் நல்வாழ்க்கையில் நாட்டங் கொண்டவராய்ச் சங்க நூல்களையே இடைவிடாது ஆராய்ச்சி செய்துகொண்டு வருபவரும் சிறந்த புலவரும் ஆகிய வித்வான் மா. இராசமாணிக்கம் பிள்ளை B.O.L. அவர்கள் இம்மண நூலைத் தயாரித்தார்கள்.

பின்னர், யாம் விரும்பியாங்குப் பிள்ளையவர்களே தமிழகத்துப் பேராசிரியர் பலரிடமும் சென்று மண நூலுக்கும் மணமுறைக்கும் ஆக்கந்தேடி மீண்டார்கள். அதுபோது பேராசிரியர் சிலர் கூறிய இரண்டொரு திருத்தங்கள் மண நூலுள் இடம்பெற்றன. இம்மணநூல் பன்முறையும் கழகத்தாரால் நன்கு பார்வையிடப் பெற்றதாகும். இம் 'மணநூல் வெளியீடு' என்னும் தலையாய பணியில் இக்கழகம் செய்துள்ள வேலையை நடுநிலையினின்றும் ஆய்ந்து, தமிழ்மக்கள், தங்கள் பழந் தமிழ்மரபின் பெருமையைக் காக்க விரைதல் வேண்டும் என்று விழைகின்றோம்.

இம்மணநூலைப் பார்வையிட்டுப் பேரன்புடன் பாராட்டித்தங்கள் கருத்துக்களை நடுநிலையினின்று வெளியிட்டுள்ள தமிழ்ப் பேராசிரியர்கட்கும் தமிழ் மடாதிபதிகட்கும் பேரறிஞர்கட்கும் நாங்கள் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இம்முறை உதவிய அப்பெருமக்கள், மேற்கொண்டு இக்கழகம் செய்ய விழையும் தமிழ்ப் பணிகட்கும் ஆக்கமளித்து ஊக்குமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றனர். அப்பெருமக்கள் நீடுவாழ

அருள்புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை யாங்கள் வழுத்துகின்றோம்.

இக்கழகப் பணியைப் பாராட்டி ஊக்கித் 'தமிழர் திருமண மாநாடு' சிறப்புற நடக்கப் பொருள் உதவி செய்த தமிழ்ப் பெருமக்கள் அனைவர்க்கும் - இம்மண நூலினை அச்சிட்டும் வேண்டும் சுவர் ஒட்டித் தாள்கள், துண்டுத் தாள்கள், பலவகைச் சீட்டுகள், இன்னவற்றை அச்சிட்டும் கணக்குச் சுவடிகளைத் தந்தும் உதவி புரிந்துள்ள தமிழ் அறிஞர் அனைவர்க்கும் இக்கழகத்தின் உள்ளார்ந்த நன்றி உரித்தாகுக. அப்பெரியார்கள் எல்லா நலன்களையும் பெற்று இக்கழகத்தின் பிறபணிகளையும் செய்யப் பெருந்துணை புரிய அருளுமாறு இறைவனை இறைஞ்சுதும்.

**இங்ஙனம்**

| | |
|---|---|
| மா.அ. கனகசபை | சிவ. முத்துக்குமாரசாமி |
| தலைவர் | பி.என். குருசாமி |
| தமிழர் நல்வாழ்க்கைக் கழகம் | செயலாளர் |
| சென்னை. | 16.7.1939 |

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | பண்டைத் தமிழர் திருமணமுறை | 7 |
| 2. | புரோகிதன் நுழைவும் புதிய சடங்குகளும் | 14 |
| 3. | நாம் செய்யத்தகும் மணச் சடங்குகள் | 15 |
| 4. | அறிஞர் பெருமக்களின் கருத்துரைகள் | 20 |
| 5. | கடவுள் வாழ்த்து | 43 |

# தமிழர் திருமணம்

## 1. பண்டைத் தமிழர் திருமண முறை

தமிழர் தொன்மை வாய்ந்தவர் என்பதும், அவர்தம் தமிழ்மொழி வடமொழியின் வேறுபட்டது என்பதும், ஆரியர்க்கு முற்பட்ட இந்தியருள் தமிழர் சிறந்தவர் என்பதும் பிறவும் மொழி ஆராய்ச்சியாலும் புதைபொருள்களாலும் இந்திய வரலாற்றாலும் உலக வரலாற்றாலும் பிறவற்றாலும் உறுதிப்பட்டுள்ள செய்திகள் ஆகும். எனவே, தமிழர் மொழி வேறு; கலை வேறு; வாழ்க்கை முறை வேறு - சுருங்கக் கூறின், தமிழர் ஆரியரின் (வடமொழியாளரின்) முற்றும் வேறுபட்டவர் என்பது ஆராய்ச்சியாற் போந்த உண்மை. பண்டைச் சங்க இலக்கியங்களைக் கொண்டு ஆராயினும், இவ்வுண்மை உணர்தல்கூடும். உண்மை இங்ஙனம் இருப்ப, இடைக்காலத்தே தமிழ் மரபுக்கு மாறான வாழ்க்கை முறை தமிழரிடைப் புகுந்துவிட்டது; தமிழர் பழக்க வழக்கங்கள் மாறின; மணமுறை மாறிவிட்டது; பிற சடங்குகள் பெருகின; இவற்றின் பயனாக இன்றுள்ள தமிழர், பெயரளவில் தமிழராக இருக்கினறனரே அல்லாமல் மெய்த் தமிழராக - சங்ககாலத் தமிழர்தம் வழித் தோன்றல்களாக - இல்லை என்பதை அறியத் தமிழர் தலைகுனிய வேண்டுபவராக உளர்.

நாம் தாய்மொழியைப் போற்றாது விட்டோம் - தமிழ்க் கலையை வளர்க்காது விட்டோம் - தமிழ்மரபைக் காவாது விட்டோம்; வடமொழிக்கே அடிமை பூண்டு பகுத்தறிவு

குன்றிய மக்களாக மாறிவிட்டோம். இம்மாறுபாடான இழிநிலைமையிலிருந்து நாம் எழுந்து, பண்டைத் தமிழராய நம் முன்னோர்தம் வீறுபெற வேண்டுமாயின், தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தல் வேண்டும் - தமிழ் மரபுக்குரிய பழக்க வழக்கங்களைக் கையாளுதல் வேண்டும்; கால நிலைமைக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களோடு நம் முன்னோர் நெறிச் செல்ல வேண்டும். எத்தகைய சடங்கைப் பழக்கத்தில் கொண்டு வருவதாயினும், அது நம் முன்னோராய சங்க காலப் புலவருடைய ஆட்சியைப் பெற்றுள்ளதா என்பதைக் கவனித்தல் வேண்டும். அத்தகைய ஆட்சியைப் பெறாத ஒன்று பயனுடையதென இன்று காணப்படின், அதனைப் போற்றிக் கைக் கொள்ளல் வேண்டும். சுருங்கக் கூறின், முன்னோர் ஆட்சியுடையனவும் தமிழ்மரபுக்கு மாறாக இராதனவும் ஆகிய பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும் நாம் கைக்கோடல் தவறாகாது.

இம்முறைப்படி பார்ப்போமாயின், நம்மிடை நடைபெறும் இக்காலத் 'திருமண முறை' நமது பண்டைத் தமிழர் மரபுக்கு முற்றும் மாறானதாகக் காணப்படும். இதனைத் தமிழ் இலக்கியச் சான்றுகொண்டு காட்டலாம். 'அகநானூறு' என்னும் சங்க நூல் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. அதில் வடசொற் கலப்பற்ற பழம் பாக்கள் பல உள. அந்நூலில் உள்ள 400 பாக்களும் ஒரு காலத்தில் ஒரு புலவரால் பாடப்பட்டவை அல்ல; பல்வேறு காலங்களில் பல்வேறு புலவரால் பாடப்பெற்றவை. அவற்றுள் இடைச்சங்கப் பாக்களும் உண்டு; காலம் குறிக்க முடியாத நிலையில் உள்ள பழம் பாக்களும் உண்டு. இத்தகைய பழம் பாக்களில் இரண்டு பாக்கள் பண்டைத் தமிழர் திருமணத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்று 86ஆம் செய்யுள் ஆகும்.

அதனைப் பாடியவர் நல்லாவூர் கிழார் என்பவர். இச்செய்யுள், மணமகன், தனக்கு முன்பு நிகழ்ந்த திருமணத்தைக் கூறுவதாகப் பாடப் பெற்றதாகும். இதனில் கூறப்பெறும் திருமண முறையைக் காண்போம்:

## செய்யுள் - 86

'மணப்பந்தரில் புதுமணல் பரப்பப்பட்டிருந்தது; பந்தரில் மனைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது; காலை நேரம் மாசற்று இருந்தது; ஒரு புறம் உணவுக் குவியல் கிடந்தது; முதுபெண்டிர் உச்சியில் நீர்க் குடமேந்தி நின்றனர்; அவர்கள் முன்னவும் பின்னவும் நீர்க் குடங்களை முறை முறை தரத்தரப் புதல்வரைப் பெற்ற மகளிர் நால்வர் கூடிக், 'கற்பு நெறியினின்றும் தவறாமல் நல்லறங்களைச் செய்து, கணவன் விரும்பத்தக்க மனைவியாக வாழ்வாயாக!' என வாழ்த்தி, மணமகளை நீராட்டினர்; அந்நீரில் நெல்லும் மலரும் கலந்திருந்தன. (நெல் - வயல் வளத்தையும், மலர் - இல்லறச் சிறப்பையும் குறிப்பன.) இங்ஙனம் பெண்ணை நீராட்டும் சடங்கு 'வதுவை நன்மணம்' எனப்பட்டது. இது நடைபெற்ற பிறகு, புத்தாடையுடன் திகழ்ந்த மணமகளை அவள் பெற்றோர் (கொடுத்தற்கு உரியவர்) மணமகற்குத் தந்தனர்; அங்ஙனம் தரும்பொழுது, 'பெரிதாக வாழ்தற்குரிய மனைக்கு உரியவள் ஆகுக' என வாழ்த்தித் தந்தனர். இதுவே திருமண நிகழ்ச்சி. பின்னர் விருந்து நடைபெற்றது. அன்றிரவே மணமக்கள் ஒன்று கூடினர்.

**"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை**
**பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்**
**தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி**
**மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்**
**கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்**
**கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்**

கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
'கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த விரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
'பேரில் கிழத்தி ஆகென மாதர்
ஓரில் கூட்டிய வுடன்புணர் கங்குல்"

## செய்யுள் -136

இதனைப் பாடியவர் 'விற்றூற்று மூதெயினனார்' என்பவர். இதில் கூறப்பெறும் மணச் செய்தியும் மணமகனே சொல்வதாகச் செய்யப்பெற்றது.

'மணப்பந்தல் அணி செய்யப்பட்டது; உயர்ந்தோர்க்கு நல்லுணவு படைக்கப்பெற்றது. நல்ல வேளையில் கடவுள் வாழ்த்து நடைபெற்றது; மணமுரசு ஒலித்தது; பெண்கள் மணமகளை நீராட்டினர்; மணல் பரப்பப்பட்ட பந்தரில் மணமக்கள் வீற்றிருந்தனர்; மண ஒலி மிகுந்திருந்தது; மணமகள் ஆடை அணிகளில் திகழ்ந்தாள்; பெரியோர், அறுகின் கிழங்கை வாகை இலையில் வைத்து நூலால் கட்டி ஆடையால் பொலியச் செய்தனர். அதன்பின், மணமகளைக் கொடுத்தற்கு உரியவர் மணமகனுக்கு வாழ்த்திக் கொடுத்தனர். அன்று இரவே மணமக்கள் ஒன்று கூடினர்.'

"மைப்புறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகடம் மண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுள் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணல்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீந்த தலைநாள் இரவில்"

தொல்காப்பிய உரையாசிரியராய நச்சினார்க்கினியர், 86ஆம் செய்யுள்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

என்னும் தொல்காப்பியக் கற்பியல் சூத்திரத்துக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார்; காட்டி, 'இதனுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறும் தமர் கொடுத்தவாறும் காண்க. சுற்றம் சூழந்து நின்றது; தமர் அறிய மணவுறையை மணமக்கள் சேர்ந்தனர்' எனக் கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியரே 136ஆம் செய்யுளை,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர்* யாத்தனர் கரணம் என்ப"

என்னும் கற்பியல் சூத்திரத்துக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார்.

இவ்விரு மணநிகழ்ச்சிகளிலும் இன்றைய திருமணத்தில் உள்ள 1. வடமொழி மந்திரங்கள் இல்லை. 2. புரோகிதன் இல்லை. 3. எரி ஓம்பல் இல்லை. 4. தீவலம் வருதல் இல்லை. 5. பொரி முகந்து போடல் இல்லை. 6. காசியாத்திரை இல்லை. 7. அம்மி மிதித்தல் இல்லை. 8. அருந்ததி காட்டல் இல்லை. 9. கோத்திரம் கூறல் முதலியன இல்லை.

இவ்விரு திருமண நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுமிடத்துக் காலஞ்சென்ற சரித்திரப் பேராசிரியரான திரு.பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், 'இப்பண்டைத் திருமண நிகழ்ச்சிகளில் எரி வளர்த்தல் இல்லை; தீவலம் வருதல் இல்லை; தக்ஷிணை பெறப் புரோகிதன் இல்லை; இது முற்றும் தமிழர்க்கே உரிய திருமணம்' எனக் குறித்திருத்தல் கவனிக்கத்தக்கது. ('பண்டைத் தமிழர் வரலாறு', ப. 80)

இத்தகைய மணமுறை இன்று மதுரை, இராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களில் வாழும் தமிழ்ப் பழங்குடி மக்களாகிய கள்ளர், மறவர், அகமுடையார் இவர்களிடை (புரோகிதன் இன்றி) நடைபெறுகிறது. அவர்களுள் ஆரிய நாகரிகத்தில் பற்றுதல் உடைய சிலரே புரோகிதமணம் நடத்துகின்றனர். கொங்கு வேளாளருள்

* ஐயர் - பெரியோர்; குறிப்பிட்ட ஒரு வகுப்பார் அல்லர்

'அருமைக்காரர்' என்னும் தமிழ்ப் பெரியவரே திருமணச் சடங்குகள் செய்தல் இன்றும் வழக்கமாக இருக்கின்றது. தமிழர் பலர், தமிழரைக் கொண்டே இன்றும் திருமணம் செய்து கொள்ளல் பெரு வழக்குடையதாகும். இத்திருமணங்கள் யாவும் மேற்கூறப்பெற்ற பண்டைத் தமிழர் திருமணத்து வழி வழி வந்தன ஆகும். இவை ஒன்றிலேனும் புரோகிதன் இல்லாமை நன்கு கவனித்தற்குரியது. தமிழ் நாட்டுப் பழங் குடிகளாகிய மலை வாணர்களிடமும் புரோகிதன் வைத்து மணம் செய்யும் பழக்கம் இல்லை. அவர்களுள் முதியோரான நாட்டாண்மைக்காரர் முன்னிலையில் சடங்குகள் நடைபெறும். இன்னும் தென்னாட்டு யாதவர், ஒருவகைச் செட்டிமார், விசுவப் பிராமணர் முதலியவர் திருமணத்தில் அவ்வவ் வகுப்பினரே திருமணம் செய்வித்தல் கருத்திற் பதிக்கற்பாலது. இதுகாறும் கூறியவற்றால், 'புரோகிதன் நுழைவு' இடைக்காலத்தில் ஏற்பட்டதுதான் என்பதைத் தமிழர் நன்கறிதல் கூடும்.

இனி, மேற்கூறப்பெற்ற அகநானூற்றுப் பாடல்களில் காணப்பெறாத புரோகிதன் நுழைவு, பிற சடங்குகள் முதலியவை ஏறக்குறைய எவ்வெவ் காலத்தில் வந்திருத்தல் வேண்டும் என்பதைத் தமிழ் இலக்கியங்கொண்டு காண்போம்.

## 2. புரோகிதன் நுழைவும் புதிய சடங்குகளும்

1. கி.பி. 2ஆம் நூற்றாண்டினது என்று ஆராய்ச்சியாளர் கூறும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் கோவலன் - கண்ணகி திருமணத்தில் (முதன் முதல்) 'மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்ட'த் திருமணம் நடந்தது என்பதும், மணமக்கள் தீவலம் வந்தனர் என்பதும், பாலிகை இருந்தது என்பதும் கூறப்பட்டுள்ளன.

2. கி.பி. 7ஆம் நூற்றாண்டினர் என்று கருதப்படும் திருஞானசம்பந்தர் திருமணத்தில் தந்தையார் பெண்ணைத் தாரைவார்த்துத் தந்தனர் என்பதும், மணமக்கள் பொரியிட்டுத் தீவலம் வந்தனர் என்பதும் கூறப்பட்டுள்ளன.

3. கி.பி. 8ஆம் நூற்றாண்டினர் என்று கருதப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கோயிலில் திருமணம் செய்துகொண்டார்.

4. கி.பி. 9ஆம் நூற்றாண்டினர் என்று கூறப்படும் ஸ்ரீ ஆண்டாள் அம்மையார் கண்ணனை மணந்ததாகக் கனவு கண்டு கூறிய செய்யுட்களில் 1.அம்மிமிதித்தல், 2. மஞ்சனம் ஆடல், 3. வீதி வலம் வருதல், 4. காப்பு நாண் கட்டல் என்பவை குறிக்கப்பட்டுள்ளன.

5. கி.பி. 12ஆம் நூற்றாண்டினர் (9ஆம் நூற்றாண்டினர் என்றும் சிலர் கூறுவர்) என்று கருதப்படும் கம்பர் பாடிய இராமாயணத்துள் (1) அருந்ததி காணல் (2) மலர்மாரி பொழிதல் (3) மணமக்கள் பெரியோரைப் பணிதல் என்பவை காணப்படுகின்றன.

# 3. நாம் செய்யத்தகும் மணச் சடங்குகள்

## I

அகநானூற்றுப் பாடல்களில் கூறப்பட்ட பண்டைத் தமிழர் திருமணம் ஒரே நாளில் நடந்தது என்பதும், அன்றிரவே மணமக்கள் ஒன்று கூடினர் என்பதும் அறியத்தக்கன. இங்ஙனம் ஒரே நாளில் திருமணம் முடித்தல் மிகவும் நல்லது. திருமண நாளுக்கு முன் செய்ய வேண்டும் சடங்குகள் அவரவர் வழக்கப்படியும் தமிழ் மரபுக்கு ஏற்றபடியும் (புரோகிதன் இல்லாமல்) செய்தல் வேண்டும். திருமணத்தன்று மணவீட்டு வாசலில் மணப்பந்தல் அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மண ஒலி முழங்குதல் வேண்டும்.

1. தாய்மார் மணப்பந்தரில் மணப் பொங்கல் இடுதல்.

இது நிகழ்ந்து கொண்டிருக்கையில் மணமக்கள் தனித்தனியே நீராடுதல்; பிள்ளை பெற்ற இல்லறப் பெண்கள் நால்வர், நெல்லும் மலரும் கலந்த நீரால்மணமகளை நீராட்டுதல் வேண்டும்; நீராட்டும்பொழுது, 'அறநெறி தவறாமல் நல்லன செய்து உன் கணவன் விரும்பத்தகும் இல்லாளாக இருக்கக் கடவாய்' என வாழ்த்துதல் வேண்டும். இதுவே பண்டைத் தமிழரின் திருமணச் சடங்குகளுள் சிறந்த பகுதி ஆகும். ஆதலின் இதனைத் தவறாது இம்முறைப்படி செய்தல்தமிழர் தம் நீங்காக் கடமையாகும்.

2. மணப்பந்தரில் குத்து விளக்கு* ஏற்றி வைத்தல்.

3. திருமணத்தை நடத்திவைக்கும் அறிஞர் (இவர், அவரவர் குடும்பத்துள் பெரியவராகவோ, ஊரில் பெரியவராகவோ, உறவினருள் பெரியவராகவோ, வேறு சிறந்த அறிஞராகவோ இருத்தல் பொருந்தும்.) மணப் பந்தரில் அவர்க்கெனப் போடப்பட்ட ஆசனத்தில் அமர்தல். மணமக்கள் மண அறிஞர் முன்வந்து அமர்தல்.

4. கடவுள் வாழ்த்து. இஃது அவரவர் சமயக் கொள்கையின்படி நடத்தப்பட வேண்டும். வைணவர் ஆயின் நாலாயிர திவ்யப் பிரபந்தச் செய்யுட்களையும், சைவராயின் தேவார திருவாசகச் செய்யுட்களையும் கடவுள் வாழ்த்தாகப் பாடலாம். அல்லது இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்களைப் பாடலாம்.

5. மண அறிஞர் இருதிறத்துப் பெற்றோரையும் மண ஒருப்பாடு கேட்டறிதல்; அங்ஙனமே மணமக்களையும் கேட்டறிதல்.

6. பின்னர் மண அறிஞர் வாழ்த்தித்தர, மணமக்கள் புத்தாடை பெற்றுக் கொண்டுபோய் அவற்றை அணிந்து மீளுதல்.

---

* 'விளக்கொளியை - திருமால்' என்பது திருமங்கையாழ்வார் திருநெடுந் தாண்டகம்.

'சோதியே! சுடரே! போற்றி - சிவபெருமான்' என்பது நாயன்மார் கூற்று.

எனவே, 'விளக்கொளி' இறை வழிபாட்டுக்கு உரியது எனல் காண்க.

7. தாலியை, வந்திருப்போர் வாழ்த்துப் பெற வைத்தல்.

8. மஞ்சள் கலந்த அரிசியும், மலர்களும் வந்திருப்போரிடம் தருதல்.

9. மணமகளைக் கொடுத்தற்கு உரியவர், அவளுடைய கையை மணமகன் கையின்மேல் வைத்து, "யாங்கள் எங்கள் அருமைப் பெண்ணாகிய ........... மனமுவந்து உமக்குத் தருகின்றோம். நீங்கள் இருவரும் என்றும் நிலைத்த அன்புடன் பிரிவின்றி நெடுங் காலம் வாழ்வீர்களாக" என்று வாழ்த்தி, இருவர் மீதும் மலர்களைத் தெளித்தல்.

10. அறிஞர், தாலியை வாழ்த்தித் தர, மணமகன் அதனை மணமகள் கழுத்தில் அணிதல்.*

11. மணமக்கள் ஒப்பந்தம்

அ) மணமகன் கூறுதல்:ஷ 'என் உயிர் அனையாய்! இந்நன்னாளில் இங்குக் கூடியுள்ள பெரியோர் முன்னிலையில் நாம் இருவரும் கணவனும் மனைவியுமாக இருந்து, நமது தமிழ் மரபுக்கு ஏற்ற முறையில் இல்லறத்தை நடத்த ஒருப்பட்டோம். இன்று முதல் நாமிருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பாலும் சுவையும் போலவும், இரண்டறக் கலந்து இன்ப வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியுமாறு வேண்டுவோமாக' எனக் கூறி மணமகட்கு மாலையிடுதல்.

ஆ) மணமகள் கூறுதல்: 'என் உயிர் அனையீர்! தாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்தபடி இந்நன்னாளில்

* இதற்கு ஈடாக அவரவர் வழக்கத்தை மேற்கொள்ளலாம்.

நாம் இருவரும் நம்தமிழ் மரபுக்கு ஏற்றபடி பலர் அறியத் திருமணம் செய்து கொண்டோம். காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம். ஆதலால், நம் இருவர் கருத்தும் நம் வாழ்நாள் அளவும் ஒன்றுபட்டதாகி, என்றும் இன்பத்தையே நுகர்ந்து, இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்த அருளுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுவோமாக' எனக் கூறி மணமகனுக்கு மாலை இடுதல்.

12. மணமக்கள் மாலை மாற்றி வாழ்த்துப் பெறுதல்.
13. வந்திருப்பவருள் பெரியோர்கள் எழுந்து மணமக்களுக்கு நன்மொழி கூறுதல்.
14. மணமக்கள் வந்திருப்போருக்கு நன்றி கூறி வணங்குதல்.
15. வெற்றிலைப் பாக்கு வழங்கல்.
16. விருந்தளித்தல்.

## II

## கோயிலில் திருமணம் செய்தல்

கோயிலில் திருமணம் செய்தலை விரும்பும் தமிழ் மக்கள் பின்வருமாறு செய்தல் சுருக்கமும் நலமுமாகும்.*

1. மணமகனும், மணமகளும் புது ஆடை புனைந்துகொண்டு தனித்தனித் தத்தம் உற்றார் உறவினர்களுடன் திருக்கோயிலுக்குச் செல்லுதல்.
2. இருவரும் இறைவனை வழிபாடு செய்த பின்னர், இறைவன் திருமுன் தாலியை மணமகன், மணமகட்கு அணிதல்.

---

* இதனை வகுத்து எழுதியவர்கள் தூத்துக்குடி, சைவ சித்தாந்தப் பெரியாராகிய திரு. சிவகுருநாத பிள்ளை அவர்கள் ஆவார்கள்.

3. மணமுடிந்த பின்னர் மணமகனும் மணமகளும் ஒரே வண்டியில் மணமகன் அல்லது மணமகள் இல்லம் சேர்தல்.
4. பெரியோர்களால் மணமக்கள் வாழ்த்தப் பெறுதல்.
5. வெற்றிலைப் பாக்கு வழங்கப் பெறுதல்; விருந்தளித்தல்.

இவ்விருவகை மணங்களுள் தமிழ் மக்களால் எது கையாளப் படினும் சாலச் சிறந்ததேயாகும். திருமணம் நடந்த அன்றிரவே அகநானூறு, செ. 86, 136இல் கண்டாற்போல மணமக்களை ஒன்றுபடுத்தல் நலமாகும்.

பருவமுள்ள இருவரைத் திருமணத்தில் மட்டும் ஒன்றுபடுத்தி, வாழ்க்கையில் வேறுபடுத்தி நாட்களைக் கழித்தல் நலமன்று. எல்லாச் சடங்குகளையும் ஒரே நாளில் நம் முன்னோர் நடத்தி வந்தனர் என்பதை நாம் மறந்து விடல் ஆகாது. தெருப்பந்தல் இடுதல் முதலிய வீணான வேலைகளை அறவே நீக்குதல் அறிவுடைமையாகும். தமிழருட் பெரும்பாலார் மிகுந்த ஏழைகள்; அவர்களும் பணக்காரரும், பொருளற்ற - நமது மரபுக்கு மாறான சடங்குகளை நீக்கி, நம் முன்னோர் அறமுறையில் ஆக்கிவைத்த மேற்கூறப்பெற்ற சடங்குகளைக் காலத்திற்கு ஏற்றவாறு கொண்டு நடத்தலே அறமாகும். மணமக்கள் பலர் அறிய மணந்து வாழ்தல்' என்பதொன்றையே நம் முன்னோர் பெரிதாகக் கருதினார்களே தவிரச் சடங்குகளைப் பெரிதாகக் கருதவில்லை. அறிவுடைய நம் முன்னோர் வழிநடத்தல் அவர் மரபில் வந்துள்ள நாம் செயற்பாலதாகும். அறிவுடையோர் இதனை ஆய்ந்து கொள்வார்களாக! பண்டைத் தமிழர் பண்பில் நின்று தமிழ் மரபினைப் பாதுகாப்பாராக! தமிழ் மரபு வாழ்க! தமிழர் திருமணம் வாழ்க!

## 4. இத்திருமண நூலைப் பற்றிய அறிஞர் பெருமக்களின் கருத்துரைகள்

□□□

**மறைமலையடிகள்**
**பொதுநிலைக்கழகம்,**
**பல்லாவரம்.** **18.4.1939**

திருவாளர் வித்துவான் இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் 'தமிழர் திருமண'த்தைப் பற்றி எழுதிய இக்கட்டுரையிற் கூறியவையெல்லாம் முற்றும் உண்மையேயாகும். தமிழ் மக்கள் அனைவரும் இப்போது ஆரிய முறையைத்தழுவி நடத்தும் மணமுறைகளை ஒழித்துத், தமிழ் முன்னோர் கொண்ட முறைகளைக் கடைப்பிடித்துத் திருமண வினைகளை நடத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

□□□

**ச. சோமசுந்தர பாரதியார் M.A., B.L.,**
**பசுமலை.** **19.4.1939**

உணவு - மணம் இவைகளில் வேறுபாடின்றிக் கலந்து ஒருமையுணர்வோடு வாழ்ந்த பழந் தமிழர் உண்மையில் நிலைத்த உறுதிப்பாடொன்றே கடைப்பிடித்தவர். மனையற வாழ்வு இருவயினொத்த மாறா அறங்காழ்த்த அன்புடை யிருவரால் நிகழ்வதென்றறிந்த

தமிழர், அவ்வாறு காதல் காழ்த்த கற்புறு சிந்தையரிருவர் கருத்தொருமித்த விடத்து, உற்ற சுற்றமும் ஊருமறிய மணவிழ வாற்றுவாரானார். வாழ்த்துடன் மணமக்கள் மனையறம் மேற்கொள்ளும் விழவில், குருக்கள்மாரின் வேலையும் தரகும் வேண்டப்படா. இறைவனுக்கும் உயிருக்குமிடையே தரகர் வேண்டாத தமிழர், காதலிருவர் வதுவை விழவிலும் தரகுக் குருக்கள்மாரை வேண்டாமல் மணவிழவு நடத்திய பழைய முறையை அகநானூற்றுச் செய்யுள்களைக் கொண்டு நன்காராய்ந்து விளக்கும் நன்முறையே பண்டைத் தமிழ் மக்கள் கையாண்டது. அதை இனித் தமிழர் மீட்டும் கையாண்டு, பிறர் ஆதிக்கத்துக்கு அடிமைப்படாதது தமிழறம் பேணுமாறு முயலும் இந்நோக்கம் நல்லதென நான் கூறுதல் மிகையாம்.

□□□

**கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L.,**
**தாகூர் சட்ட விரிவுரையாளர்,**
**சென்னை.** **19.4.1939**

பண்டைத் தமிழர் மணமுறையும் இக்காலத்தில் தமிழர் திருமணம் நிகழ வேண்டிய முறையும் இக்கட்டுரையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. அவற்றைத் தழுவி எதிர்காலத்தில் தமிழர் மணம் நடைபெறுதல் பல்லாற்றானும் பெரும்பயன் விளைப்பதுடன், பல குறைகளையும் ஒழித்து நல்வாழ்வு பயப்பதாகும்.

□□□

**ஆ. கார்மேகக்கோனார்**
**தமிழ் விரிவுரையாளர்,**
**அமெரிக்கன் கல்லூரி, மதுரை. 20.4.1939**

இக்காலத்து அறிஞர்கள் மணவினையின் முறையும் செலவினமும் எவ்வளவு எளிமையும் சுருக்கமுமாக இருக்க வேண்டுமென்று கருதுகின்றனரோ அவ்வாறே பண்டைத் தமிழர்தம் மணமும் அமைந்திருந்ததென்பதனை இக்கட்டுரையில் திறன்பெறும் சான்றுகள் மூலம் நிறுவப்படுவதை அறியின், ஒவ்வொரு தமிழ் மகனும் இறும்பூதும் பெருமகிழ்வும் எய்துவன் என்பதில் சிறிதும் ஐயுறவு இல்லை. இத்தொன்மை மணவினையின் மாண்பினை, தனிநிலை குலைந்து நிற்கும் இக்காலத் தமிழர் அறிந்து கடைப்பிடிப்பாராயின், தமிழரது தலையன்புசால் சீரிய மனையறம் மீண்டும்தலையெடுத்துத் தழைத்தோங்குவது உறுதி.

□□□

**பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்**
**தமிழ்ப் பேராசிரியர்,**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,**
**அண்ணாமலை நகர். 22.4.1939**

பண்டைத் தமிழர் மணமுறைகள் பிற்காலத்து ஐயர் யார்த்த கரணங்களால் தமிழ் மக்களிடத்தினின்றும் மறைந்தன. அம்முறைகளுள், இக்காலத்துக்குப் பொருந்தாத சிலவற்றை யொழித்தும் பொருந்திய சிலவற்றைப் புகுத்தியும் ஓர் ஒழுங்குபடுத்தித் தமிழ் நிலத்துள்ளாரெல்லோரும் மேற்கொள்ளத் தக்கவாறு

வகுத்துக் கோடல் நன்றே. இது கருதி யெழுதப்பட்ட இக்குறிப்பைப் பார்த்தேன். இம்முறையைக் கடைப்பிடித்து ஒழுகின், தமிழர் வாழ்க்கை பொருணிலைக்கும் அன்பு நிலைக்கும் பொருந்தியதாகும் என்பது என் கருத்து.

□□□

**பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார்**
**தமிழ் விரிவுரையாளர்,**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,**
**அண்ணாமலைநகர்.** **22.4.1939**

'தமிழர் திருமணம்' என்பது குறித்து வித்துவான் திரு.மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் எழுதியிருப்பது பழந் தமிழ்மக்களின் மணமுறையை உள்ளவாறு எடுத்துக் காட்டுவதாகும். இப்பொழுது நிகழ்ந்துவரும் பொருளற்ற போலி முறையினை ஒழித்து, தம் முன்னோர்களின் ஒழுக்க முறையினைத் தழுவிப் பலரும் ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு திருமண நிகழ்ச்சிகளைத் திருத்தியமைத்து நடைமுறையிற் கொண்டுவருதல் தமிழ்மக்களின் நலத்திற்கு இன்றியமையாததேயாகும்.

□□□

**L. உலகநாதபிள்ளை**
**தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),**
**அரசர் கல்லூரி, திருவையாறு.** **23.4.1939**

பண்டைத் தமிழர் மணமுறை முன்போல நன்னிலைக்கு வருவதைக் காண எனக்கு மிக்க விருப்பம். இம்முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று யான் விழைகின்றேன்.

□□□

**R. வேங்கடாசலம் பிள்ளை**
**தமிழ்ப் பேராசிரியர்,**
**அரசர் கல்லூரி, திருவையாறு.** **23.4.1939**

எனது அன்பர் திரு.மா. இராசமாணிக்கம் அவர்கள் எழுதிய 'தமிழர் திருமணம்' என்னும் நறுமண மலர், தமிழ் மக்கள் செய்த தவப்பயனாற் பூத்து மிளிர்வது; மணமக்கள் மேற்கொள்ளத் தக்க தலைமணியாகும். தமிழ்த்தாயின் திருவருளால் அண்மையில் வெளிவருவதாக! தமிழர் யாவரும் பெற்றுப் பயனுறுவராக!

□□□

**த.வே. உமாமகேசுவரம் பிள்ளை, B.A., B.L.,**
**கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர்,**
**தஞ்சை.** **23.4.1939**

திருவாளர் வித்வான் இராசமாணிக்கம் அவர்கள் எழுதிய தமிழர் திருமணச் சீர்திருத்தக் குறிப்பினைப் படித்தேன். பண்டைத் தமிழர்களின் மணமுறையை எடுத்துக் காட்டுகளாலும், ஏதுக்களாலும் நன்கு விளக்கியிருக் கின்றனர்.

ஆரியர்களின் பொருளற்ற மணச் சடங்குகள் பல நம்மனோரால் ஏற்கப்பட்டுள்ளன. அவை வடமொழியில் நிகழ்த்தப்படுவதும் மதியுடைமையன்று. சாதிச் செருக்கினால் தருக்கித் திரியும் இனத்தவரின் துணையை நாடுவதும், அவர்களைத் தாழ்ந்து வணங்குவதும் இகழத்தகும் செயல்களாம்.

சுற்றத்தார் சூழ, அன்பர்கள் மணவினைக்கான பணி செய, திருமண ஒப்பந்தம் செய்து, மங்கலஅணியை அணிவித்து, சுற்றமும் தமரும் வாழ்த்தெடுக்க, கடவுள்

வழிபாட்டுடன் ஒன்றுபட்ட நெறியில் திருமணங்கள் நிகழ்தலே நன்முறையென எண்ணுகின்றேன்.

மணமுறையைத் திட்டம் செய்வதுடன், ஆடவர், பெண்டிர்களின் மறுமணம், மணமுறிவு முதலிய பொருள்கள் பற்றியும் மாநாடு முடிவு செய்யுமென நினைக்கின்றேன்.

□□□

**M.S. பூர்ணலிங்கம் பிள்ளை, B.A., L.T.,**
**முன்னீர்ப்பள்ளம்,**
**திருநெல்வேலி.** **24.4.1939**

தற்காலம் நிகழுந் திருமணம் தமிழர் திருமணமுமன்று; ஆரியர் திருமணமுமன்று. காதல் மணம் ஒழிந்து கட்டாய மணம் நடைபெறுதல் தவறு என்பதை யுணர்ந்து தொன்மை முறையைக் கடைப்பிடித்தல் நலம். வறுமை எய்தாமலும் இருவர் அன்பும் நாளொரு மேனியாக வளரத்தக்க முறையிலும் திருமணஞ் செய்தல் திருத்த முறையாகும். இதனை ஒருவாறு நம் நண்பர் இராசமாணிக்கம் அவர்கள் தெளிவு பெறக் கூறியிருப்பது எவரும் ஏற்கத்தக்கதாகும். தமிழர் முன்னேற்றங் கருதும் அன்பர்கள் பலரும் இதனை ஆதரிக்குமாறு விரும்புகின்றேன்.

□□□

**P. சிதம்பரம் பிள்ளை, B.A., B.L.,**
**வழக்கறிஞர்,**
**நாகர்கோயில்.** **24.4.1939**

எனது நண்பர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் கொண்டு வரப் போகும் தமிழர் மணத்தைக் குறித்துள்ள

சீர்திருத்தத்தை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். என்னைப் பொறுத்த வரையிலும் நான் நடைமுறையிலே இதைப் பின்பற்றி வந்திருக்கின்றேன். பொதுவாகவே தமிழர்கள் இதைக் கைக்கொண்டால் நமது பொருளாதார நிலைமை உயர்வு அடையும் என்பதில் ஐயமில்லை.

□□□

**சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார், M.A., B.L.,**
**தமிழ் விரிவுரையாளர், சையின்ஸ் கல்லூரி**
**திருவனந்தபுரம். 25.4.1939**

தற்காலத்தில் நடைபெற்று வரும் தமிழர் திருமண முறையில் பல குறைகளிருக்கின்றன என்பதைக் கற்றார் யாவரும் ஒப்புக்கொள்வர். நமது திருமண முறையைத் திருத்தி அமைக்க வேண்டியது மிக அவசியமாகும். திருவாளர் இராசமாணிக்கம் அவர்கள் மேற்சொன்ன விஷயத்தைக் குறித்து ஆராய்ந்து ஒரு கட்டுரை வரைந்திருக்கின்றனர். தனியே கூட்டப்பட்ட ஒரு தமிழர் மகா நாட்டில் இவ்விஷயத்தைக் குறித்து நன்கு ஆராய்ந்து ஒரு முடிவு செய்தால், அது தமிழர்களுக்குச் செய்த ஒரு பேருபகாரமாகும்.

□□□

**K.N. சிவராஜ பிள்ளை, B.A.,**
**தமிழ் ஆராய்ச்சியாளர் (ஓய்வு),**
**சென்னைப் பல்கலைக்கழகம்,**
**(கோட்டாறு). 26.4.1939**

தற்காலத்தில் தமிழர்கள் கையாண்டு வருகிற மணமுறை ஆரியர்களின் தர்ம சாஸ்திர முறையே ஆகும். தனித்தமிழ் உணர்ச்சி தோன்றிப் பெருகிவரும்

இக்காலத்தில் இதுகாறும் நாம் பின்பற்றிவரும் இம்முறையை நீக்கி, பண்டைத் தமிழர் ஆதரித்த முறையைப் பின்பற்றுவதே நலமென யாவரும் ஒப்புக்கொள்வர். அதனால் இச்சிறு நூலில் குறிக்கப்பட்டுள்ள மணமுறைச் சீர்திருத்தம் தமிழர் அனைவர்க்கும் அங்கீகரிக்கத் தக்கதாயிருக்குமென்று நம்புகிறேன்.

□□□

**C.K. சுப்பிரமணிய முதலியார், B.A.,**
**வழக்கறிஞர்,**
**கோவை.** **28.4.1939**

தமிழர் தமக்குரிய மணமுறையைப் பற்றிச் சிந்தித்து ஒழுங்குபடுத்தற்குரிய காலம் இதுவென்று நினைக்கின்றேன். தமிழ்ப் பழைய இலக்கிய இலக்கணங்களிற் பேசப்பட்ட களவு - கற்பு என்ற இருவகை மண ஒழுங்குகளும் இக்காலத்து வழங்குதல் ஒழிந்து, இடைக்காலத்துப் புகுந்த ஒருவகைச் சடங்கு மணமே நிகழ்ந்து வருகின்றதென்று கருத இடமுண்டாயிருக்கிறது. நம் பழக்க வழக்கங்கள் உண்மைப் பொருள் நிலையில் உயர்ந்திருந்தன என்பது சொல்ல வேண்டுவதில்லை. எனவே இந்நாளில் தமிழர் கையாளும் மணமுறை இவ்விருவகைப் பொருணிலையாலும் தாழ்வுற்றிருக்கின்றது என்பது சொல்ல வேண்டுவதில்லை. அன்பர் திரு. வித்துவான் இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் இம்முறைகளை நன்காராய்ந்து ஒழுங்குபடுத்திச் சீரிய மணமுறை ஒன்று தமிழர்கள் பின்பற்றுமாறு வகுத்துள்ள கட்டுரை கண்டு மகிழ்ந்தேன். இடைக்காலத்துப் புகுந்த பொருளற்ற சடங்குகளுள் நீக்கத் தக்கனவற்றை நீக்கல் குறைவாகாது.

இப்பொருள்களை ஆய்ந்து பின்பற்றிப்பொருளாலும் உயர்வாலும் நலமுற்று வாழ்வார்களாக! இந்தக் கட்டுரையிற் காணப்பட்டன இன்றியமையாத மணச் சடங்குகளாம். இவற்றுடன் தமிழர்க்கேற்றவாறு கொள்ளத் தக்கனவற்றைக் கொண்டொழுகுதலையும் அறிவுடையோர் ஏற்பர் என நம்புகிறேன். தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான்தானே வள்ளி நாயகியார் திருமணத்தில் தமிழ் மணத்தின் பல பகுதிகளை நடத்திக்காட்டி யருளினர் என்ப. இந்நாள் தமிழுலகுக்கு அன்பர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் இதனால் ஒரு பேருதவி புரிகின்றார்கர்ள என்று சொல்வேன்.

□□□

**பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை**
**தமிழ் விரிவுரையாளர்,**
**அரசாங்கக் கல்லூரி,**
**கோவை.** **28.4.1939**

தங்களுக்குரிய வழக்க ஒழுக்கங்களைச் செய்து கோடற்கும் பிறர் உதவியை எதிர்பார்க்கின்றவர்கள் தமிழர் என்னின், இதனினும் வெட்கக் கேடான தன்மை வேறேது? ஆதலின், முதற்கண் நமது நண்பர் வித்வான் திரு. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் கொண்டுவரும் மணமுறை ஆகிய இதனைக் கடைப்பிடித்து ஒழுகி இவ்வாறே இன்னும் பல துறைகளிலும் தமிழர், தங்களையே துணைக்கொண்டு முன்னேறித் திகழ்வார்களாக! இத்துறையில் முன்வந்து ஊக்கும் நமது நண்பர் அவர்கட்குத் தமிழகம் கடப்பாடுடையது.

□□□

**துடிசைகிழார் அ. சிதம்பரனார்**
**சர்க்கிள் இன்ஸ்பெக்டர் (ஓய்வு),**
**இராஜவீதி, கோவை.** **28.4.1939**

'தமிழர் திருமணம்' என்ற கட்டுரையைப் பார்த்தேன். அதில் கூறிய முறைகள் எல்லாம் தமிழர் பழந்தமிழ் நூல்களிற் கண்டனவே.

ஆரியர்களுடைய எண்வகை மணமுறை தமிழர்களுக்கு ஒவ்வாது. தமிழர் மணமுறை வேறு என 'இங்கித மணவியல்' என்ற நூலில் பரக்கக் கூறியுள்ளேன். தற்காலம் தமிழர்களுள் வழங்கும் மணமுறைகளில் ஏற்பன கொண்டு ஏலாதன நீக்கி, சிறுகச் சிறுகச் சீர்திருத்தத்தைச் செய்வது மிகவும் பொருத்தமானது என்றும் தோன்றுகிறது. நியாயமான சடங்குகளை விடாமல் ஒழுங்கு பெற அவைகளை நடத்துவதே முறையாகும். சென்ற முப்பது வருடங்களாக இம்முறையையே யான் கையாண்டும் பிறரைக் கையாண்டு வரும்படி செய்து வருவதும் பலர் அறிந்ததே. ஆதலின், தமிழர் மணமுறை செழிக்க இறைவன் திருவருள் புரிவானாக!

□□□

**வித்வான் மு. வரதராசன், B.O.L.,**
**தமிழாசிரியர், நகராண்மை உயர்கலாசாலை,**
**திருப்பத்தூர்.** **07.5.1939**

தமிழர் முன்னேற வேண்டின் தமிழர் வாழ்வு தமிழ் வாழ்வு ஆக மாறுதல் வேண்டும்; அவ் வாழ்வில் அடிப்படையாகத் தமிழர் மணவினையில் தமிழ் மணம் வீசுதல் இன்றியமையாது வேண்டற்பாலது அன்றோ? ஆதலின், தமிழ் மண முறையை விளக்கி நல்வழி காட்டும் தமிழன்பர் அத்துறையில் உழைக்கும் உழைப்பைப்

போற்றுதலும் இச்சீரிய முறையைக் கையாண்டு தமிழ் மரபினைக் காத்தலும் நமது கடமையாகும்.

□□□

**பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள்**
**தமிழ் விரிவுரையாளர்,**
**லேடி வெல்லிங்டன் போதனாமுறைக் கலாசாலை,**
**சென்னை.** **07.5.1939**

திருமணத்தின் கருத்தை மணமக்களுக்கும், மற்றோர்க்கும் நன்கு விளக்குதற்குத் தமிழர் மணச்சடங்குகளே சிறந்தன என்பது சங்க நூல்களைக் கற்றோர் நன்கு உணர்ந்திருப்பர். அவற்றைப் பற்றாததற்குக் காரணம், தக்க ஏற்பாடுகளும் சிறந்த முறைகளும் இல்லாமையேயாகும். இஃது என் உள்ளக் கிடக்கை, இப்போதேனும் திருவாளர் வித்துவான் - இராசமாணிக்கம் பிள்ளையவர்களும், மற்றாரும் மேற்கொண்ட முயற்சியினால் இம்முறை நிலை நின்று தமிழ்நாட்டில் உலவுமேல், இது தமிழர் செய்த பெருந்தவமேயாகும். தமிழ்த்தாய் உளம்பூத்து மணமக்களை ஆசி கூறி நிற்பள்.

□□□

**பண்டிதை த. பதுமாவதி அம்மாள்**
**திருவல்லிக்கேணி,**
**சென்னை.** **07.5.1939**

தமிழ் மறை யோதித் தமிழ் வழிபாடு செய்யும் நம் தமிழ் நாட்டில் சிறிது காலமாகத் தமிழ் மண முறை மறைந்து கிடப்பது தமிழ்த்தாயின் தவக் குறையேயாகும். தமிழர் மண முறை மிகச் சிறந்ததும் பணச் சுருக்கமுடையது மென்பது பழந்தமிழ் நூலை ஆராய்ந்தவர்

அறிந்ததொன்றாம். அவ்வந் நாட்டிற்குரிய வழக்க முறைகளை அவ்வந் நாட்டவர் பின்பற்றுவதே சாலச் சிறப்புடைத்து.

இம்முறையில் தமிழர் மனக் குறை நீக்க இன்று ஸ்ரீமான் இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் கொண்ட இச் சீர்திருத்தத்தை யாவரும் மனமுவந்தேற்று நடைமுறையில் கொண்டுவரின், தமிழ்த்தாயின் மனம் குளிரும் என்பதில் ஐயமின்று.

□□□

**வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்**
**தமிழ் ஆராய்ச்சியாளர்,**
**சென்னைப் பல்கலைக்கழகம். 07.5.1939**

இஞ்ஞான்று தமிழரிடை நடைபெற்று வரும் திருமணச் சடங்குகள் பல, சங்ககால வழக்கத்திற்குப் பிற்பட்டவையாகும். இவற்றை நீக்கித் தமிழர், தம் முன்னோர் செய்த முறையில் திருமணம் செய்து, நம் தமிழ் மரபினைக் காத்தல் கடனாகும். இதுபற்றி நண்பர் திரு.மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் B.O.L., எழுதியிருப்பது நடைமுறையில் கொண்டுவரத்தக்கது.

□□□

**ஆ. கந்தசாமி முதலியார், B.A.,**
**வழக்கறிஞர்,**
**சாத்தூர். 12.5.1939**

திருவாளர் வித்துவான் இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் எழுதிய திருமணம் பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். அவர்கள் முயற்சி வெற்றி பெற வேண்டுமென்பது எனதாசை, தமிழரிடை இந்நாள்

நடைபெறும் திருமணங்களில் தமிழ் மணம் சிறிதுமில்லை; பொருளுடைக் கரணங்கள் விரவப் பெறவுமில்லை. திருமணத்தில் சிறப்புடைப் பகுதி மணமக்கள் இசைவாம். அவ்விசைவு மணச் சடங்கில் சிறப்பிடம் பெறுதல் வேண்டும். 'வந்தெனைக் கரம்பற்றிய வைகல்வாய்' என்ற பாட்டில், கம்ப நாடர் 'இந்த விப்பிற விக்கிரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம் தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்' என்ற சொற்றொடரால், மணச் சடங்கில் மணமகன் உறுதிச் சொல்லும், மணமகள் இசைவும் இடம் பெற்றிருந்தமையை வெளிப்படுத்தியுள்ளார். மணவினைகள் திருத்தியமைக்கப் பெறல் வேண்டுமென்பதில் சிறிதும் ஐயுறலின்று. பொருளில் சடங்குகளை நீக்கி, பொருளுடைய சில சடங்குகளே திருமணத்தில் நடைபெறச் செய்தல் வேண்டும்.

□□□

**வெ.ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.**
**வெள்ளகால்,**
**திருநெல்வேலி மாவட்டம். 14.5.1939**

மணமகனும் மணமகளும் மணஞ்செய்தற்குரிய பருவம் அடைந்த பின்பே மணஞ்செய்ய வேண்டு

மென்பதிலும், ஒரே நாளில் மணவிழாவை முடிக்க வேண்டும் என்பதிலும், மணஞ் செய்த நாள் முதலாகவே மணமக்கள் ஒன்றுகூடி வாழத் தொடங்கல் நலம் என்பதிலும், புரோகிதன் இல்லாது மணவினை நிகழ்த்தல் சிறந்தது என்பதிலும் நான் ஒத்த கருத்துடையவன்.

□□□

ந. சிவகுருநாத பிள்ளை
சித்தாந்த ஆசிரியர்
தூத்துக்குடி. 15.5.1939

'............... தங்களது 'தமிழர் திருமணம்' என்ற கட்டுரையைப் பெற்று மகிழ்ந்தேன். தமிழர் ஒழுக்க வழக்க முறைகளைச் சீர்ப்படுத்துதற்குத் தாங்கள் முயன்றிருப்பது போற்றுதற்குரியதே. தாங்கள் நம் தமிழ் மக்களின் பண்டைய வழக்க முறைகளை ஒருவாறு ஒட்டித் தங்கள் கட்டுரையில் வகுத்துள்ளவாறு 15 சடங்குகளை மட்டும் கைக் கொள்வது சால நலனுடையதாகும் என்பது அடியேன் கருத்துமாகும்.

அன்றியும் மற்றோர் முறையும் விரும்புவோர் செய்து கொள்ளுதற்குரியது என்பதும் அடியேன் கருத்தாகும். அது மிகச் சுருங்கிய செலவிலும் முடியக் கூடியது.

1. மணமகனும், மணமகளும் புது ஆடை புனைந்து கொண்டு தனித் தனித் தத்தம் உற்றார் உறவினர்களுடன் அவரவர்கள் வழிபடும் திருக் கோயிலுக்குச் செல்லுதல்.

2. இருவரும் இறைவனை வழிபாடு செய்த பின்னர் இறைவன் திருமுன் தாலியை மணமகன் மணமகட்கு அணிதல்.

3. மணமுடிந்த பின்னர் மணமகனும், மணமகளும்ஒரே வண்டியில் மணமகன் அல்லது மணமகள் இல்லம் சேர்தல்.

4. பெரியோர்களால் மணமக்கள் வாழ்த்தப் பெறுதல்.

5. தாம்பூலம் வழங்கப் பெறுதல்.

6. இயன்ற முறையில் உணவருந்தல்.

திருக்கோயிலில் தாலிகட்டும் முறை நமது சுதந்தர மூர்த்தி அடிகள் பரவையாரையும், சங்கிலியாரையும் மணக்கும் காலத்தில் நடத்திக் காட்டியதுமாகும்; அன்றியும் இறைவனால் ஆணையிடப் பெற்றதுமாகும்.

□□□

**இசைத் தமிழ்ச்செல்வர்**
**T. இலக்குமணப் பிள்ளை, B.A.,**
**திருவனந்தபுரம். 15.5.1939**

'................. தமிழருடைய திருமணச் சடங்கில் வடமொழியில் மந்திரம் சொல்லும் வழக்கினை நுழைத்த செய்தியை ஆராயும்போது அஃது உண்மைத் தமிழருக்குச் சற்று வருத்தத்தைக் கொடுக்கின்றது. ஏனெனில்,

'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும்' என்ற முதியோர் வாக்கின்படி எல்லா அற்புதங்களையும் இயற்றிய தெய்வத் தமிழ்மொழி நம்மிடம் இருக்கும்போது அதைப் புறக்கணித்துச் சடங்கு நடத்தும் தமிழ்த்தாய் தந்தையருக்கோ அன்றிக் குழுமியோருக்கோ பொருள் விளங்காதபடி ஏனைய மொழியிற் கடவுள் வணக்கம், மண மக்கள் வாழ்த்து முதலியன நடத்துவதன் குறிப்புத்தான் என்ன? தமிழரின் பண்டைக் காலத்து வழக்கத்தை யொட்டியே இப்போதும் சடங்கு நடத்துவதே நமது தமிழ்ப் பற்றுக்கும் சுயமதிப்புக்கும் பொருந்துவதென்று எனக்குத் தோன்றுகின்றது. ஏழைத் தமிழருடைய தற்காலப் பொருளாதார நிலைமைக்கு, நாயனார் அருளிய,

> **"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை**
> **போகா றகலாக் கடை"**

யென்ற பொன்னே போன்ற வாக்குக்கிணங்கச் செலவுகளைச் சுருக்கித் திருமணத்தை ஒரு நாளில் நடத்தி விடுவதே தகுதியாம்.

ஆகவே, வித்வான் திரு.மா. இராசமாணிக்கம் அவர்களுடைய கட்டுரையிலடங்கிய கொள்கைகள் என் கருத்துக்கு மிகவும் பொருத்தமுடையனவாயிருக்கின்றன.

□□□

**மு. சுந்தர முதலியார்**
**மாபேராசிரியர், காமக்கூர்,**
**வட ஆற்காடு ஜில்லா.** **17.5.1939**

இந்நாளில் இக்கட்டுரை தமிழர் பலராலும் ஆர்வத்தோடு ஏற்றுத் தனித்தமிழ் வழக்கினை ஆட்சியிற் கொணர்ந்து, போலிச் செயல்களைத் தவிர்த்துப் பிறமொழிக் கலப்பில்லாத் தூய நிகழ்ச்சி யாற்றப் பெருந்துணை புரியும் என்பது என் கருத்து.

□□□

**ஆ.சு. முத்தையா முதலியார், M.A.,**
**ஆர்ட்ஸ் கல்லூரி,**
**திருவனந்தபுரம்.** **17.5.1939**

'தமிழர் திருமணம்' என்ற கட்டுரையைப் படித்தேன். அம்மணம் செவ்வையும் இயற்கையுமான முறையில் நடைபெற்று வந்தது என்ற செய்தி இக்கட்டுரையினின்றும் தெளிவாகின்றது. இவ்வித ஒழுங்கில் தமிழ்மக்கள் திருமணத்தை நடத்தி வருவார்களாயின், அவர்கள் ஒழுக்கமும் நடைமுறையும் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை. இவ்வித மணத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் கடைப்பிடித்து ஒழுகுமாறு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிக!

□□□

**ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்**
**மடாதிபதி, காஞ்சிபுரம்.**
**(தங்கல்) திருக்கழுக்குன்றம். 17.5.1939**

திருவாளர் இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் எழுதிய திருமணச் சீர்திருத்தத்தைப் படித்தேன். தமிழ்ப் பெருமக்கள் பழகிவந்த முறையில் பொருளுடையோருக்கும், பொருளில்லாதாருக்கும் அதிகச் செலவில்லாத வகையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தவிதச் சடங்குகளில் அதிகச் செலவு செய்வது ஆடம்பரத்தை உத்தேசித்ததேயாகும்.

இம்முறையிற் செய்யும் சேவை தமிழுக்குச் செய்த சேவையாகும். இதனால் நம் தமிழுலகம் முன்னேற்ற

மடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

□□□

**சுவாமி முக்தானந்தா**
**வடமொழிக் கல்லூரி,**
**சூளை, சென்னை. 17.5.1939**

ஒன்றே குலமும் ஒருவனே கடவுளுமாகக் கொண்டு பண்டைக் காலந்தொட்டுப் பகுப்பின்றி வாழ்ந்து வந்த தமிழ் மக்களை, தந்நலங்கருதிய புரோகிதர் வஞ்சித்து ஒன்றன்பின் ஒன்றாய் ஒப்படி செய்யும் விளைநிலமென உன்னி, அவர்கள் வாழ்க்கையில் மணவினைகளில் பொருளற்ற சடங்குகளையும், அச்சடங்குகளின் போது மந்திரமெனக் காட்டிப் பொருளறியாப் பொருத்தமற்ற உரைகளையும் புகுத்திக் காலங்கழியும் முறையிற் செய்து பொருளீட்டி வறிஞராக்கி வந்தனர்; வருகின்றனர்.

இந்நிலையில் நமது வித்வான் திருவாளர் இராசமாணிக்கம் அவர்கள் எழுதியுள்ள ‘தமிழர்

திருமணம்' என்னும் கட்டுரையானது தமிழ் மக்கட்கு பொருளாதார முறையிலும், அறிவுத் துறையிலும் ஆக்கமுண்டாக்குவதாயும், பொருத்தமற்ற சடங்குகளைப் போக்குவதாயும், தமிழர்களைப் பண்டைய இயற்கை முறையில் ஊக்குவதாயும் உள்ளது. இம்முறையே நம்மிடைப் பரவி என்றும் நின்று நிலவுவதாமாறு இறையருளுமாக.

□□□

## திருவரங்க நீலாம்பிகை அம்மையார்

**திருநெல்வேலி. 17.6.1939**

பண்டைத் தமிழர் திருமண முறைகளைச் சென்னை - திருவாளர் வித்வான் இராசமாணிக்கம் அவர்கள் பழந் தமிழ்ப் பெரு நூல்களை ஆராய்ந்தெழுதிய கட்டுரையைக் கண்டு பெரிதும் மகிழ்கின்றேன்.

நம் பழந்தமிழர் உயர்ந்த திருமண முறைகள் தமிழ் நாட்டில் இடைப்பட்ட காலத்தில் பிறநாட்டினர் நுழைவால் மறைபட்டு வழக்கிலில்லாதிருந்தன.

இப்போது பழந்தமிழ் மணமுறைப்படி நந்தமிழர்தம் திருமணங்கள் சிறப்பாக நடைபெற வேண்டுமென்று அறிவுடையோர் பலர் ஆங்காங்கு முயன்று வருகின்றனர். இதுகாறும் புதைபட்டுக்கிடந்த பழந்தமிழ் மண நிகழ்ச்சிகள் இக்காலத்திற்குத் தக்கபடியாகவே அமைந்திருக்கின்றன. ஆகலான்,

வீண் ஆரவாரச் சடங்குகளுஞ் செலவுகளுமின்றித் திருமணம் நடாத்தி மணமக்களைச் சீர்பெறச் செய்வதே தமிழர் திருமணத்தின் நோக்கமாகும்.

தமிழர் திருமணத்தில் முதன்மையாக நீக்க வேண்டுவன வடமொழி மந்திரங்களும் சொற்றொடர்களு

மாகும். திருமணப் பந்தரிலுள்ள மணமக்களிருவர்க்கும், ஆண்டுக் குழுமியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கும் ஒரு சொல்லேனும் விளங்காத வடமொழி மந்திரங்கள் நந்தமிழர்க்கு யாது பயனைத் தரும்? அவற்றால் நாமடையும் பயன் ஏதுமில்லை! ஆதலால், மணப்பந்தரில் வடமொழி மந்திரங்கள் கட்டாயம் விலக்கப்படல் வேண்டும்.

திருமணப் பந்தலில் முதன்முதல் நடைபெற வேண்டிய கடவுள் வழிபாடு தமிழிலேயே இருத்தல் வேண்டும்.

வடநாட்டில் வடநாட்டினர் செய்யுந் தங்கள் திருமணங்களில் நந்தமிழர்களைக் கொண்டு தமிழ் மறைகளை ஓதித் திருமணங்களை நடத்துவதைக் கண்டிருக்கின்றோமா? இவரொழிந்த ஏனைய மலையாளர், தெலுங்கர், கன்னடர் முதலியோர் எவரேனும் நந்தமிழ் மொழியில் அல்லது பிற மொழிகளில் உள்ள மறைமொழிகளைக் கூறித் திருமணங்கள் நடாத்துவதை நாம் காண்கின்றோமோ? இல்லையே!

மற்ற நாட்டினரைக் கண்டாயினும் நந்தமிழ் நாட்டு மக்கள் நம் நாடு, மொழி, பழக்க வழக்கங்களாகிய இவைகளில் உணர்ச்சியும் பற்றும் உடையவர்களா

யிருத்தலோடு திருமணங்களைத் தமிழ் முறையிலே நடத்த வேண்டுவது மிக இன்றியமையாததாகும்.

திரும்ணங்களைத் தமிழ் முறைப்படி நடத்த ஆண் மக்கள் முன்வரினும் நம் பெண் மக்கள் அவற்றின் உண்மை உணராமல் அவைகட்குத் தடை கூறுவர். அதற்குக் காரணம் அவர்கட்குப் பழந்தமிழ் நூல்களின் பயிற்சியில்லாமையேயாகும்.

ஆயினும், அவர்கள் நாமிப்போதுள்ள தாழ்ந்த நிலையினையும், தமிழ் மணத்தின் அரும்பெரும்

பயனையுஞ் சிறிது ஓர்ந்து பார்ப்பார்களாயின், அங்ஙனந் தடை கூறமாட்டார்கள்.

ஆண் மக்களும் பெண் மக்களும் ஒரே கருத்துடையவர்களாய் வீண் ஆரவாரச் செலவுகளின்றித் தமிழர் திருமண முறைப்படி மணங்களை நடத்திச் சிறந்த நிலையை எய்துவார்களாக.

□□□

**மோ. கந்தசாமி முதலியார், B.A., M.R.A.S.**
**தமிழ்ப் பேராசிரியர்,**
**பச்சையப்பன் கல்லூரி, சென்னை. 10.7.1939**

பண்டைக் காலத்தில் தமிழர் முறையினைப் பற்றிச் சுருக்கமாக வித்வான் இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் எழுதியதைப் பார்த்து மகிழ்ந்தேன். தமிழர் தம் பழைய பெருமை பொருந்திய வரலாற்றினைத் தெளிந்து கொள்ளாமையால் பிற்காலத்தில் புகுத்தப் பெற்ற சடங்குகளை, மிகப் பழைய காலந்தொட்டு வழங்கி வருகின்றன என்று நம்பிக் கிடப்போர் பலர். தமிழருள்ளும் சில பகுதியினர் பார்ப்பனப் புரோகிதம் இன்றியே திருமணம் நடத்தி வருவதும் இப்போதும் காண்கின்றோம். காஞ்சிபுரத்தில் ஏகம்ப முடையார்க்கு ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று இரவு 12 மணிக்குத் திருமணக் காட்சி நடைபெறும்போது அத்திருமண மண்டபத்தில் நூற்றுக்கணக்கான தமிழர் திருமணம் நடைபெற்று வருதலை இன்றும் காணலாம். அப்போது தாலி கட்டுதலும் மாலை மாற்றுதலுமே நிகழ்கின்றன. புலவர் புராணம் இயற்றிய முருகதாசருக்குத் தொண்டு செய்ய விரும்பி, புதுவை சுந்தரம்பாள் அவரை மணந்து கொண்டபோது, முருகதாசர் அக்கினி சாட்சியை விடத் திருவருள் சாட்சியே

சிறப்புடையது என்று துணிந்து முருகன் திருமுன் சுந்தரம்மாள் கழுத்தில் உருத்திராக்கம் அணிந்தனர் என்பது அவரிடம் நெருங்கிய பழக்கமுடையவரும் என்னுடைய ஆசிரியரும் ஆகிய சித்தாந்த சரபம் - பூவை - கலியாணசுந்தர யதீந்திரர் முதலிய அன்பர் பலரும் அறிந்ததே.

தமிழராகிய மணமக்களுக்குப் பொருள் விளங்காத 'புலால் நாற்றம் வீசுகின்ற' அயல் மொழியைக் கூறித் திருமணம் நடத்துவது மணமக்களைத் தோற்பாவையாகக் கொண்டதாகும் அன்றோ!

இங்ஙனம் கொள்வது பல நாட்டு நூலறிவு பரவி வருகின்ற இந்தக் காலத்தில் பொருந்தாச் செய்கையேயாகும்.

□□□

**கா.ர. கோவிந்தராஜ முதலியார்**
**தமிழாசிரியர் (ஓய்வு)**
**பச்சையப்பன் உயர்கலாசாலை,**
**சென்னை.** **10.7.1939**

தமிழர் திருமண மகாநாட்டார் அமைத்துள்ள திருமண முறை, பண்டைச் சான்றோர் கருத்தைப் பின்பற்றியதாயும், தமிழர் யாவரும் ஒப்புக் கொள்ளற்குரியதாயும், தமிழர் அனைவரும் ஒரு குழுவினர் என்னுங் கருத்தை உறுதியுறக்கொண்டு, ஒற்றுமை எய்தி உலக மக்களிடை நன்மதிப்பிற்குரிய நல்லியல் மக்களாய் விளங்கும்படி செய்யவல்லதாயும் இருக்கின்றது. ஆதலின் இதனை யான் முழுமனத்துடன் ஆதரிக்கின்றேன்.

□□□

**திரு.வி. கலியாணசுந்தர முதலியார்**
**ஆசிரியர், 'நவசக்தி'**
**இராயப்பேட்டை, சென்னை.** **11.7.1939**

இயற்கையில் பலதிற அறக்கூறுகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று கூர்தல், கூர்தலாவது உள்ளது சிறத்தல். (Evolution)

இக் கூர்தல் அறத்துக்குத் துணை போகும் துறைகள் பலப்பல. அவைகளுள் தலையாயது மன்றல்.

மன்றல் அஃறிணை உலகிலும் நிகழ்கிறது; உயர்திணை உலகிலும் நிகழ்கிறது. முன்னையதில் வழுக்கல் நேர்வதில்லை; பின்னையதில் வழுக்கல் நேர்வதுண்டு. காரணம் அதற்குப் பகுத்தறிவின்மையும், இதற்குப் பகுத்தறிவுண்மையுமாகும்.

வழுக்கலால் உறுவது வீழ்ச்சி. வீழ்ச்சி, கூர்தல் அறத்துக்கு இடர் செய்வது. இடரைப் போக்க அவ்வக்கால அறிஞர் முயலுவது வழக்கம். அறிஞர் முயற்சியினின்றும் எழுவது சீர்திருத்தம்.

வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை சீர்திருத்த நோக்குடையவரென்பது எனக்குத் தெரியும். இவர் இதுபோழ்து திருமணச் சீர்திருத்தத்தில் கருத்தமைந்து இந்நூல் யாத்துள்ளனர். இந்நூலில் சில பகுதிகளைப் பார்க்கும் பேறு எனக்குக் கிடைத்தது. நூல் நன்முறையில் யாக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்களுள் சிறந்த ஒன்றின் மீது நாட்டம் செலுத்திய வித்துவான் இராசமாணிக்கம் பிள்ளைக்கு எனது நன்றி யுரியதாகுக.

□□□

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சிவானந்த எதீந்திரர்**
**வேத மொழிபெயர்ப்பாளர்,**
**வடமொழிக் கல்லூரி,**
**சூளை, சென்னை.** **11.7.1939**

உலகில் நமது தமிழ்நாடு, ஆளுஞ் செங்கோலாலும், பூணும் பஞ்சு நூலாலும், எழுதிவைத்த வஞ்ச நூலாலும் பட்டபாடு சொல்லொணாதது. திருவருளால் இஞ்ஞான்று, நம் பழந்தமிழ் மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டுப் பல்வேறுவகை வழிகள் சீர்ப்படுத்தப்படினும் முழுதும் முன்னேறுவதற்கு முதற் காரணமாயுள்ளது தமிழ்த் திருமணமேயாம் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இத்தகைய தமிழ் நெறிச் செல்லில், அமுதினும் இனிய நலமதை அடையலாம். தமிழ்த் தெய்வ அருள் தழைக!

□□□

# கடவுள் வாழ்த்து



## சிவபெருமான் வாழ்த்து*

### சம்பந்தர் - திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானை
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே. (1)

### நாவுக்கரசர் - திருவேட்களம் - குறுந்தொகை

நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. (2)

---

* இவற்றைத் தொகுத்தவர் - கரந்தைப் புலவர் கல்லூரித் தமிழாசிரியர் வித்வான் திரு. வெள்ளைவாரணனார்.


## திருக்கருகாவூர் - திருத்தாண்டகம்

குருகாம் வயிரமாம் கூறுநாளாம் கொள்ளுங் கிழமையாம்
கோளே தானாம்
பருகா வமுதமாம் பாலினெய்யாம் பழத்தி னிரதமாம்
பாட்டிற் பண்ணாம்
ஒருகா லுமையா ளோர்பா கனுமாம் உள்நின்ற
நாவிற் குரையாடியாங்
கருவா யுலகுக்கு முன்தோன்றும் கண்ணாங் கருகாவூ
ரெந்தை தானே. (3)

### சுந்தரர் - திருக்கலயநல்லூர் - பண் - தக்க ராகம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்பும்வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடு மணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே. (4)

# திருமால் வாழ்த்து



1. அன்றுசார சரங்களைவை குந்தத் தேற்றி
அடலரவப் பகையேறி அசுரர் தம்மை
வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாம மேவிச்
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
என்றுநின்றான் அவனிவனென் றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர்! நீரே

குலசேகராழ்வார்

2. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்வீசும் பருளும் அருளொடு
பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராய
ணாஎன்னும் நாமம்.

திருமங்கையாழ்வார்

3. நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராதென் னெஞ்சி னுள்ளாய்!
பெருமான்!உன் திருவடிகள் பேணி னேனே.

திருமங்கையாழ்வார்

4. 'பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே!' என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

தொண்டரடிப்பொடி ஆழ்வார்

# கடவுள் வாழ்த்து

1. அம்மே !எம் அறிவிப்பை அணிந்தருளல் வேண்டும்;
அழகொளிருந் தனித்தமிழே ஆட்சிகொளல் வேண்டும்;
எம்முடைய தமிழ்க்கலைகள் எழிலுறுதல் வேண்டும்;
எதமுடைய பிறசெயல்கள் ஏற்றிடுதல் வேண்டும்;
வெம்மைதரும் பிறமொழியில் சடங்கொழிதல் வேண்டும்;
விருப்புறுநற் றமிழ்ச்சடங்கு வீறுபெறல் வேண்டும்;
அம்மையினும் அன்புடையாய்! அருளுடையாய்! எந்தாய்!
அடியேம்வேண்டுரை கேட்டிங் கருள்தர வேண்டுவமே.

2. அப்பா !யாம் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;
அன்புநிலை 'தமிழர்மணம்' ஆட்சிகொளல் வேண்டும்;
இப்பாரில் 'தமிழ்மரபு' வீறுபெறல் வேண்டும்;
இன்றுநடை பெறுகின்ற தமிழர்மணம் நாட்டில்
ஒப்பற்ற முறைமையினில் ஓங்கிடுதல் வேண்டும்;
ஒருமைமனத் துடன்தமிழர் கடைப்பிடித்தல் வேண்டும்
அப்பாலுக் கப்பாலாய் அருவுருவாய் நின்றிலங்கும்
அண்ணால் !நின் அன்புநிலை அடியேங்கட் கருளே.

தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தார்

# புதிய வெளியீடுகள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | திருவிளையாடற் புராணம் (படங்களுடன்)<br>பிஎல். முத்துக்குமரன் | 100.00 |
| 2. | அறுபத்து மூன்று நாயன்மார் கதைகள் –<br>அ.ச.ஞானசம்பந்தன் (படங்களுடன்) | 100.00 |
| 3. | பகவத் கீதை முத்துக்கள்<br>(185 பகவத் கீதை முத்துக்கள்) | 10.00 |
| 4. | சிவாலய வழிபாடு (பிஎல். முத்துக்குமரன்) | 8.00 |
| 5. | அருணகிரி நாதர் அருளிய கந்தர் அனுபூதி<br>100 பாடல்கள் – மூலமும் தெளிவுரையும் | 10.00 |
| 6. | விரதங்கள் | 10.00 |
| 7. | ஷீரடி சாய்பாபா வழிபாடு | 10.00 |
| 8. | பெரியபுராணம் என வழங்கும் அறுபத்து மூன்று<br>நாயன்மார் கதைகதள் (சுருக்கம்) | 10.00 |
| 9. | துயர் துடைக்கும் மந்திரங்கள்<br>பேரா. அ.ச.ஞா. உரை | 10.00 |
| 10. | கண்ணன் ஒரு சூத்ரதாரி (படங்களுடன்) | 10.00 |


முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
தொலை.:26163596, 9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

# தமிழர் திருமணம்



அறிஞர் பெருமக்களின்
கருத்துரைகள் இணைந்தது

டாக்டர் மா. இராசமாணிக்கனார்